# 16

# யாக்கோபும் ஏசாவும்!

**(Patriarchs and Prophets, pp. 177–1)**

**ஆதியாகமம் 25:19–24; 27.**

ஈசாக்கின் இரட்டைக் குமாரர்களான யாக்கோபும் ஏசாவும் குணத்திலும் வாழ்க்கையிலும் குறிப்பிடும்படியான மாறுபாட்டைக் காண்பித்தார்கள். இந்த வேறுபாடு அவர்களுடைய பிறப்பிற்கு முன்பாகவே தேவனுடைய தூதனால் முன்சொல்லப்பட்டது. ரெபேக்காளின் கலக்கமான ஜெபத்துக்குப் பதிலாக, இரண்டு குமாரர்கள் அவளுக்குக் கொடுக்கப்படுவார்கள் என்று அறிவித்தபோது, அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையில் இருவரும் வல்லமையான ஜாதிகளுக்குத் தலைவர்களாவார்களென்றும், ஆனால் ஒன்று மற்றதைவிடவும் பெரியதாக இருக்குமென்றும், இளையவன் தலையான இடத்திலிருப்பான் என்றும் தூதன் அவளுக்குத் திறந்து காண்பித்தான். (1)

ஏசா சுயத்தை திருப்திப்படுத்துவதில் விருப்பம் கொண்டவனாகவும், தன் விருப்பங்களையெல்லாம் நிகழ்காலத்தின்மேல் வைத்தவனாகவும் வளர்ந்தான். கட்டுப்பாட்டில் பொறுமையிழந்து, வேட்டையாடுவதிலிருக்கும் சுதந்திரத்தில் மகிழ்ச்சிகொண்டு, இளமையிலேயே ஒரு வேட்டைக்காரனின் வாழ்க்கையைத் தெரிந்தெடுத்தான். என்றபோதும் அவன் தகப்பனுக்குப் பிரியமானவனாயிருந்தான். அமைதியான சமாதானப் பிரியனாயிருந்த அந்த மேய்ப்பன், பயமின்றி மலைகள்மேலும் வனாந்தரங்களிலும் அலைந்து, தன் தகப்பனுக்கான பொழுதுபோக்கோடும் தன்னுடைய சவாலான வாழ்க்கையின் உணர்ச்சியூட்டுகிற சம்பவங்களோடும் வீட்டுக்குத் திரும்பின இந்த மூத்த குமாரனின் தைரியத்தாலும் வீரியத்தாலும் கவரப்பட்டான். யாக்கோபு சிந்தனையுள்ள, ஜாக்கிரதையான, கவனிப்புக் கொடுக்கிற, நிகழ்காலத்தைவிடவும் எப்போதும் எதிர்காலத்தை யோசிக்கிறவனாக, மந்தைகளை கவனிப்பதிலும் நிலத்தை உழுவதிலும் ஈடுபட்டு இல்லத்திலே வசிப்பதில் திருப்தியடைந்திருந்தான். அவனுடைய பொறுமையான விடா முயற்சியும், பணத்தை கவனமாக செலவிடும் குணமும், தொலைநோக்கும்

அவனுடைய தாயால் மதிக்கப்பட்டது. அவனுடைய பிரியங்கள் ஆழமும் பலமுமாயிருந்தது. அவனுடைய மென்மையான இடையறாத கவனம், ஏசாவினுடைய கொந்தளிக்கிற மற்றும் எப்போதாகிலும் காட்டப்படுகிற தயவு கொடுத்ததைக்காட்டிலும் அதிகமான சந்தோஷத்தை அவளுக்குச் சேர்த்தது. ரெபேக்காளுக்கு யாக்கோபுதான் அன்பான பிள்ளை. (2)

ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டு, அவனுடைய குமாரனுக்கு உறுதிபண்ணப்பட்ட வாக்குத்தத்தங்கள்தான் ஈசாக்காலும் ரெபேக்காளாளும் அவர்களுடைய ஆசைகள் மற்றும் நம்பிக்கைகளின் மாபெரும் பொருளாயிருந்தது. இந்த வாக்குத்தத்தங்களோடு ஏசாவும் யாக்கோபும் பரீட்சயமாகியிருந்தனர். சேஷ்டபுத்திரபாகம் உலக சம்பத்தை சுதந்தரிப்பது மாத்திரமல்ல. ஆவிக்குரிய தலைமையையும் உள்ளடக்கியிருந்ததால், அதை மிக முக்கியமான காரியமாக கருதும்படி அவர்கள் கற்பிக்கப்பட்டனர். அதைப் பெற்றுக்கொண்டவன் குடும்பத்தின் ஆசாரியனாயிருக்கவேண்டும். அவனுடைய வம்சத்தில்தான் உலகததின் மீட்பர் வருவார். மறுபக்கம், சேஷ்டபுத்திரபாகத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவன்மேல் கடமைகளும் தங்கியிருந்தது. அதன் ஆசீர்வாதங்களை சுதந்தரிப்பவன், தன் வாழ்க்கையை தேவனுடைய சேவைக்கு அப்பபணிக்கவேண்டும். ஆபிரகாமைப்போல, அவன் தெய்வீக கோரிக்கைகளுக்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். தன் திருமணத்திலும் குடும்ப உறவுகளிலும் பொது வாழ்க்கையிலும் தேவனுடைய சித்தத்தை ஆலோசிக்கவேண்டும். (3)

இந்த சிலாக்கியங்களையும் நிபந்தனைகளையும் ஈசாக்கு தன் பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்தினான். கூடவே, முதல் மகனான ஏசாதான் சேஷ்டபுத்திர பாகத்துக்கு தகுதியானவன் என்றும் தெளிவாக அறிவித்தான். ஆனால் ஏசாவுக்கு அர்பணிப்பதில் விருப்பமில்லை. மதவாழ்க்கை வாழ எந்த நாட்டமும் இல்லை. ஆவிக்குரிய சேஷ்டபுத்திரபாகத்தோடு இணைந்திருந்த கோரிக்கைகள் அவனுக்கு வரவேற்றத்தகாதவையாக, வெறுக்கக்கூடிய கட்டுப்பாடுகளாகக்கூட இருந்தன. ஆபிரகாமோடு செய்யப்பட்ட தெய்வீக உடன்படிக்கையின் நிபந்தனையான தேவனுடைய பிரமாணம், அடிமைத்தனத்தின் நுகமாக ஏசாவால் கருதப்பட்டது. சுயத்தில் திளைப்பதை விரும்பின அவன், தான் விரும்பினபடி செய்கிற சுதந்தரத்தைப்போல வேறு எதையும் வாஞ்சிக்கவில்லை. அவனுக்கு அதிகாரமும், செல்வமும், விருந்தும், களியாட்டமும்தான் மகிழ்ச்சியானவைகள். கட்டுப்பாடற்ற சுதந்திரம் தந்த தன்னுடைய வனாந்திர அலைச்சல் வாழ்க்கையில் அவன் மேன்மைபாராட்டினான். ரெபேக்காள் தூதனுடைய வார்த்தைகளை நினைவுகூர்ந்து, தன் குமாரர்களுடைய குணங்களை தனது கணவனைவிடவும்

தெளிவான நுண்ணறிவோடு வாசித்தாள். தெய்வீக வாக்குத்தத்தத்தின் சுதந்திரம் யாக்கோபிற்காகத்தான் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பதில் நம்பிக்கையாயிருந்தாள். ஈசாக்கிடம் தூதனின் வார்த்தைகளை அவள் மீண்டும் சொன்னாள். ஆனால் தகப்னுடைய பிரியம் மூத்தமகனில் மையங் கொண்டிருந்தது. அவன் தனது நோக்கத்தில் அசையாது இருந்தான். (4)

சேஷ்ட புத்திரபாகம் தனக்குத்தான் வரவேண்டும் என்கிறதைக் குறித்த தெய்வீக அறிவிப்பை யாக்கோபு தன் தாயிடமிருந்து அறிந்துகொண்டான். அது அவனுக்கு அளிக்கக்கூடிய வாய்ப்புகளுக்காக அவன் சொல்லமுடியாத வாஞ்சையால் நிரப்பப்பட்டான். அவனுடைய தகப்பனின் சொத்துக்களை அடைவதற்காக அவன் தாகமாயிருக்கவில்லை. ஆவிக்குரிய சேஷ்ட புத்திரபாகமே அவனுடைய ஏக்கத்தின் காரியமாக இருந்தது. நீதியுள்ள ஆபிரகாமைப்போல—தேவனோடு பேசி, தனது குடும்பத்துக்காக பாவநிவாரண பலியை செலுத்தி, தெரிந்துகொள்ளப்பட்ட ஜனத்துக்கும் வாக்குப்பண்ணப்பட்ட மேசியாவிற்கும் மூதாதையனாக இருந்து, உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தில் சேர்க்கப்பட்டிருந்த நித்திய சுதந்தரத்தை சுதந்தரித்து—இங்கேதான் அவனுடைய தீவிரமான வாஞ்சையைத் தூண்டிவிட்ட வாய்ப்புகளும் கனங்களும் இருந்தன. அவனுடைய மனது காணப்பட்டிராத அதன் ஆசீர்வாதங்களைத் தேடி எப்போதும் எதிர்காலத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. (5)

தன் தகப்பன் ஆவிக்குரிய சேஷ்ட புத்திரபாகத்தைக்குறித்து சொன்ன அனைத்தையும் அவன் கவனித்துக் கேட்டான். தன் தாயிடமிருந்து கேட்டவைகளை கவனமாக பாதுகாத்து வைத்திருந்தான். அவனுடைய வாழ்க்கையின் ஆட்கொள்ளும் ஆசையாகும்வரை இரவும் பகலும் இந்த காரியம் அவன் மனதை ஆட்கொண்டது. அவன் இவ்வாறு நித்தியமானவைகளை தற்காலிக ஆசீர்வாதங்களுக்குமேலாக மதித்தபோது, தான் பக்திகாட்டிய தேவனைக்குறித்த அனுபவ அறிவு இல்லாதிருந்தான். அவன் இருதயம் தெய்வீகக் கிருபையால் புதுப்பிக்கப்படவில்லை. ஏசா முதல் குமாரனின் உரிமைகளை வைத்திருக்கும்வரையிலும் தன்னைக்குறித்த வாக்குத்தத்தம் நிறைவேற முடியாது என்று அவன் நம்பினான். தன் சகோதரன் அலட்சியமாக நினைத்திருந்த, ஆனால் தனக்கு மிகவும் விலையேறப்பெற்றதாயிருந்த ஆசீர்வாதத்தை அடையும்படி தொடர்ச்சியாக ஏதாவது வழியை திட்டமிட யோசித்துக்கொண்டிருந்தான். (6)

ஒருநாள் தன் வேட்டையிலிருந்து களைப்புற்று இளைத்தவனாக வீடு திரும்பிய ஏசா, யாககோபு தயாரித்துக்கொண்டிருந்த உணவை கேட்டான். ஒரே சிந்தையால் ஆட்கொள்ளப்பட்டிருந்த யாக்கோபு, இதைச்

சாதகமாக்கிக்கொண்டு, சேஷ்ட புத்திரபாக விலையினால் தன் சகோதரனின் பசியை திருப்திப்படுத்ததுவதாக கூறினான். “அதற்கு ஏசா: இதோ, நான் சாகப்போகிறேனே, இந்தச் சேஷ்ட புத்திரபாகம் எனக்கு என்னத்திற்கு” என்றான். பொறுப்பற்ற சுயத்தில் திளைத்த வேட்டைக்காரன், ஒரு பாத்திரம் சிவப்புக் கூழுக்காக தன் சேஷ்ட புத்திரபாகத்தை விட்டுக்கொடுத்து, தன் வியாபாரத்தை ஒரு ஆணையினால் உறுதிப்படுத்தினான். மிகக் குறைந்த நேரத்தில் அவனுடைய தகப்பனுடைய கூடாரத்தில் அவனுக்கு உணவு கிடைத்திருக்கும். ஆனால் அந்த நொடியின் விருப்பத்தை திருப்தி செய்யும்படியாக, கவனமின்றி, தேவன்தாமே அவனுடைய பிதாக்களுக்கு வாக்குப்பண்ணியிருந்த மகிமையான சுதந்தரத்தை பண்டமாற்றினான். அவனுடைய முழு விருப்பமும் நிகழ்காலத்தில் இருந்தது. பரலோகத்தினுடையதை உலகத்தினுடையதற்காக தியாகம் செய்ய, எதிர்கால நன்மையை நொடி இன்பத்திற்காக மாற்றிக்கொள்ள அவன் ஆயத்தமாயிருந்தான். (7)

“இப்படி ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை அலட்சியம்பண்ணினான்.” அதை அப்புறப்படுத்தியதில் ஒரு சுமை தனிந்ததாக உணர்ந்தான். இப்போது அவன் பாதை தடைபடாது. தான் விரும்பினபடி அவன் செய்யலாம். அந்த, சுதந்திரம் என்று தவறாக அழைக்கப்பட்ட கட்டுப்பாடற்ற இன்பத்திற்காக பரலோகத்திலிருக்கிற தூய்மையும் களங்கப்படாததும் நித்தியமுமான சுதந் தரத்தை இன்றைக்கும் எத்தனைபோர் விற்றுக்கொண்டிருக்கிறார்கள்! (8)

வெளிப்புறமான உலக கவர்ச்சிகளுக்கே எப்போதும் உட்பட்டு, ஏத்தின் குமாரத்திகளில் இரண்டு மனைவிகளை ஏசா தனக்கு எடுத்துக்கொண்டான். அவர்கள் பொய்தேவர்களை சேவிக்கிறவர்கள். அவர்களுடைய விக்கிரக வணக்கம் ஈசாக்கிற்கும் ரெபேக்காளிற்கும் கசப்பான வேதனையாயிருந்தது. தெரிந்துகொள்ளப்பட்ட ஜனத்திற்கும் புறஜாதிகளுக்குமிடையே திருமணத்தைத் தடைசெய்திருந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளில் ஒன்றை ஏசா மீறிவிட்டான். என்றபோதும், அவன்மீது சேஷ்ட புத்திரபாகத்தை வைக்கிறதற்கான தீர்மானத்தில் ஈசாக்கு உறுதியாயிருந்தான். ரெபேக்காளின் காரணங்களும் ஆசீர்வாதத்திற்கான யாக்கோபினுடைய வலிமையான வாஞ்சையும் அதன் கடமைகளுக்கு ஏசா காட்டின அலட்சியமும்—எதுவும் தகப்பனுடைய நோக்கத்தில் மாற்றம் கொண்டுவரவில்லை. (9)

ஈசாக்கு வயதாகி, குருடாகி, விரைவில் மரித்துப்போவதை எதிர்பார்த்து, தன்னுடைய மூத்த குமாரன்மேல் ஆசீர்வாதங்களை வைப்பதை இன்னும் தாமதிக்கக்கூடாது என்று தீர்மானிக்கும்வரையிலும் வருடங்கள் கடந்துபோனது. ஆனால் ரெபேக்காள் மற்றும் யாக்கோபின்

எதிர்ப்பை அறிந்ததினால், இந்த புனிதமான ஆராதனையை இரகசியமாக நடத்த அவன் தீர்மானித்தான். இப்படிப்பட்ட சமயங்களில் செய்யப்படும் வழக்கமான விருந்தின்படி முற்பிதா ஏசாவை அழைத்து: “வனத்துக்குப்போய், எனக்காக வேட்டையாடி, அதை எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்து, ... நான் மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்க என்னிடத்தில் கொண்டுவா” என்றான். (10)

ரெபேக்காள் அவனுடைய நோக்கத்தை அறிந்தாள். தேவன் தமது சித்தமாக அறிவித்ததற்கு இது முரணானது என்பதில் அவள் நம்பிக்கையாயிருந்தாள். தெய்வீக அதிருப்தியை சம்பாதிக்கும் ஆபத்திலும் அவனது இளைய மகனை தேவன் அழைத்திருக்கிற தகுதியிலிருந்து தடுக்கும் ஆபத்திலும் ஈசாக்கு இருந்தான். ஈசாக்கோடு காரணப்படுத்திப் பேச அவள் வீணாகவே முயற்சித்தாள். எனவே ஒரு உபாயத்தை நாட தீர்மானித்தாள். (11)

ஏசா தன் வேலையைச் செய்ய புறப்பட்டவுடனே ரெபேக்காள் தன் நோக்கத்தை நிறைவேற்ற இறங்கினாள். ஆசீர்வாதம் முடிவாகவும் திரும்ப எடுக்கக்கூடாமலும் ஏசாவின்மேல் வைக்கப்படுவதை தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, நடந்ததை யாக்கோபுக்கு அவள் கூறினாள். தன்னுடைய நடத்துதலை பின்பற்றினால் தேவன் வாக்குப்பண்ணினவிதமாக அதைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தன் மகனுக்கு உறுதியளித்தாள். அவள் முன்மொழிந்த திட்டத்துக்கு யாக்கோபு உடனே உடன்படவில்லை. தன் தகப்பனை ஏமாற்றும் நினைவு அவனுக்கு மிகுந்த துயரத்தைக் கொடுத்தது. அப்படிப்பட்ட பாவம் ஆசீர்வாதத்தைக்காட்டிலும் சாபத்தையே கொண்டுவரும் என்று அவன் உணர்ந்தான். அவனுடைய மனப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அவன் தனது தாயின் ஆலோசனைகளை செயல்படுத்த முன்சென்றான். நேரடியான பொய்யைப் சொல்வது அவனுடைய எண்ணமாயிருக்கவில்லை. ஆனால் தகப்பனுடைய சமூகத்துக்கு வந்தபோது, திரும்பிப்போகக்கூடாத தூரத்துக்கு அவன் சென்றுவிட்டதாகத் தோன்றியது. எனவே இச்சித்திருந்த ஆசீர்வாதத்தை வஞ்சகத்தினால் அடைந்தான். (12)

யாக்கோபும் ரெபேக்காளும் தங்கள் நோக்கத்தில் வெற்றியடைந்திருந்தாலும் தங்களுடைய வஞ்சகத்தினால் பிரச்சனையையும் வருத்தத்தையுமே அடைந்தார்கள். யாக்கோபுதான் சேஷ்ட புத்திரபாகத்தை பெறவேண்டும் என்று தேவன் அறிவித்திருந்தார். அவர் தங்களுக்காக கிரியை செய்யும்படி அவர்கள் விசுவாசத்தோடு காத்திருந்தார்களென்றால், அவருடைய சொந்த நேரத்தில் அவருடைய வார்த்தை

நிறைவேறியிருந்திருக்கும். ஆனால் தேவனுடைய பிள்ளைகளென்று இன்று தங்களை அழைத்துக்கொள்ளுகிற அநேகரைப்போல, காரியத்தை அவர் கைகளில் கொடுக்க அவர்கள் சித்தமில்லாதிருந்தார்கள். தன் மகனுக்குக் கொடுத்த தவறான ஆலோசனைக்காக ரெபேக்காள் மிகக் கசப்பாக வருந்தினாள். அதுவே அவனை அவளிடமிருந்து பிரிக்கும் காரணமாயிற்று. அவள் அவனுடைய முகத்தை அதற்குப்பின்பு காணவே இல்லை. சேஷ்ட புத்திரபாகத்தை வாங்கின அந்த மணிநேரத்திலிருந்து யாக்கோபு சுய குற்ற உணர்வினால் வாதிக்கப்பட்டான். அவன் தன் தகப்பனுக்கு எதிராகவும், தன் சகோதரனுக்கு எதிராகவும், தேவனுக்கு எதிராகவும் குற்றஞ்செய்தான். ஒரு குறுகிய மணிநேரத்தில் அவன் வாழ்நாள்முழுவதும் மனம் வருந்துகிற வேலையை நடப்பித்தான். அவன் பிள்ளைகளுடைய துன்மார்க்க செயல் அவன் ஆத்துமாவை வாதித்த பின்நாட்களில் இந்த காட்சி அவன்முன் தெளிவாக இருந்தது. (13)

யாக்கோபு தன் தகப்பனுடைய கூடாரத்தை விட்டு வெளியேறின சற்றுநேரத்தில் ஏசா நுழைந்தான். அவன் தனது சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப்போட்டு, அதை ஒரு ஆணையினாலே உறுதிப்படுத்தியிருந்தபோதும் அவனுடைய சகோதரனின் உரிமைகளை கருத்தில் கொள்ளாது, அதன் ஆசீர்வாதங்களைப் பெறுவதில் தீர்மானமாயிருந்தான். ஆவிக்குரியதோடு குடும்பத்தின் தலைமைப் பொறுப்பையும் தகப்பனுடைய செல்வத்தில் இரண்டு பங்கையும் கொடுக்கக்கூடிய உலகத்துக்குரிய சேஷ்ட புத்திரபாகமும் இணைக்கப்பட்டிருந்தது. இவைகள்தான் அவனுக்கு மதிப்பான ஆசீர்வாதங்கள். “உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி, என் தகப்பனார் எழுந்திருந்து, உம்முடைய குமாரனாகிய நான் வேட்டையாடிக் கொண்டுவந்ததைப் புசிப்பாராக” என்றான். (14)

திகைப்போடும் துயரத்தோடும் நடுங்கியவனாக, தனக்கு நடந்த வஞ்சகத்தை, வயதான குருடாகியிருந்த தகப்பன் அறிந்தான். அவன் நீண்டகாலமாக நெஞ்சார நேசித்திருந்த நம்பிக்கைகள் முறியடிக்கப்பட்டன. தன் மூத்த குமாரனுக்கு நிகழ்ந்த ஏமாற்றத்தை அவன் நன்றாக உணர்ந்தான். என்றபோதும், அவனுடைய நோக்கத்தை முறியடித்து, தடுக்கும்படி அவன் தீர்மானமாயிருந்த அதே கரியத்தை நடப்பித்தது தேவனுடைய ஏற்பாடுதான் என்ற உணர்த்துதல் அவன் மனதில் பளிச்சிட்டது. தூதன் ரெபேக்காளிடம் சொன்ன வார்த்தைகளை அவன் நினைவுகூர்ந்தான். இப்போது யாக்கோபு குற்றவாளியான குற்றம் ஒருபுறமிருக்க, தேவனுடைய நோக்கத்தை மிக மேன்மையாக நிறைவேற்றும் ஒருவனை அவனில் கண்டான். ஆசீர்வாத வார்த்தைகள் தன் உதடுகளின்மேல் இருந்தபோது, ஆவியானவரின்

ஏவுதல் தன்மேல் இருந்ததை அவன் உணர்ந்திருந்தான். சூழ்நிலைகள் அனைத்தையும் அறிந்தவனாக, யாக்கோபின்மேல் அறியாமல் கூறப்பட்ட ஆசீர்வாதத்தை "நான் புசித்து அவனை ஆசீர்வதித்தேனே, அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் இருப்பான்" என்று அவன் உறுதிப்படுத்தினான். (15)

தன்னுடைய தொடும் எல்லைக்குள் இருந்தபோது, ஏசா ஆசீர்வாதத்தை குறைவாக மதிப்பிட்டிருந்தான். அது இப்போது அவனைவிட்டு என்றைக்குமாக போனபின்பு, அதைப் பெற்றுக்கொள்ள வாஞ்சித்தான். அவனுடைய அவசரமான, உணர்ச்சிசார்ந்த இயற்கையின் பலம் அனைத்தும் எழும்ப, அவனுடைய துக்கமும் கோபமும் பயங்கரமாயிருந்தன. மிக அதிக கசப்பான அலறுதலோடு: "என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும் என்று சொல்லி," "நீர் எனக்கு ஒரு ஆசீர்வாதத்தையாகிலும் வைத்துவைக்கவில்லையா" என்று ஏசா சத்தமிட்டு அழுதான். ஆனால் கொடுக்கப்பட்ட வாக்குறுதி திரும்ப பெறப்படமுடியாது. மிக அலட்சியமாக அவன் பண்டமாற்றம் செய்த சேஷ்ட புத்திரபாகத்தை அவனால் மீண்டும் அடையமுடியாது. "ஒருவேளைப் போஜனத்துக்காக" ஒருபோதும் கட்டுப்படுத்தப்பட்டிராத பசியை நிமிடத்தில் திருப்திசெய்யும்படியாக ஏசா தன் சுதந்தரவீதத்தை விற்றான். தன் மதியீனத்தை அவன் பார்த்தபோது, ஆசீர்வாதத்தைத் திரும்ப அடையக்கூடாதபடி தாமதமாகியிருந்தது. "அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்"—எபி. 12:16,17. மனம் வருந்தி தேவனுடைய தயவை அடையும் வாய்ப்பிலிருந்து அவன் வெளியே அடைக்கப்படவில்லை. ஆனால் சேஷ்ட புத்திரபாகத்தை மீண்டும் அடையும் எந்த வழியையும் அவனால் காணமுடியவில்லை. அவனுடைய துக்கம் பாவ உணர்த்துதலிலிருந்து துளிர்க்கவில்லை. தேவனோடு ஒப்புரவாகிறதை அவன் வாஞ்சிக்கவில்லை. பாவத்தின் விளைவுகளுக்காக அவன் துக்கப்பட்டான், பாவத்துக்காக அல்ல. (16)

தெய்வீக ஆசீர்வாதங்களுக்கும் அதன் கோரிக்கைகளுக்கும் அலட்சியம் காட்டினதினால் ஏசா வேத வாக்கியங்களால்: "வேசிக்கள்ளன்" (வச. 16) என்று அழைக்கப்படுகிறான். கிறிஸ்துவினால் தங்களுக்கு சம்பாதிக்கப்பட்டிருக்கிற மீட்பை சாதாரணமாக எண்ணுகிறவர்களையும் பரலோக சுதந்தரவாளி என்னும் உரிமையை அழிந்துபோகிற பூமிக்குரியவை களுக்காக தியாகம்பண்ண ஆயத்தமாயிருக்கிறவர்களையும் அவன் எடுத்துக்காட்டுகிறான். திரளானோர் எதிர்காலத்திற்கான எந்த ஒரு சிந்தையும் கவனமும் இல்லாது, நிகழ்காலத்துக்காக பிழைக்கிறார்கள். ஏசாவைப்போல "புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம்" (1 கொரி. 15:32) என்று

அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் நட்டங்களினால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். சுயமறுப்பை செயல்படுத்துவதற்குப்பதிலாக, மிகவும் மதிப்புவாய்ந்தவைகளாக கருதப்படுகிறவைகளை விட்டுவிடுவார்கள். கீழ்த்தரமான பசியை திருப்திசெய்வதையோ, அல்லது சுயத்தை மறுத்து தேவனுக்குப் பயப்படுகிறவர்களுக்கு மாத்திரம் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிற பரலோக ஆசீர்வாதங்களையோ, இதில் ஒன்றை விட்டுவிட அழைக்கப்படும்போது, பசியின் உரிமைகள் மேற்கொள்ளுகிறது. தேவனும் பரலோகமும் கிட்டத்தட்ட வெறுக்கப்படுகிறது. கிறிஸ்தவர்களென்று அழைத்துக்கொள்ளுகிறவர்களிலும் எத்தனைபேர், ஆரோக்கியத்தை பாதித்து ஆத்துமாவின் உணர்வுகளை உணர்வற்றதாக்குகிற உணவில் திளைப்பதைப் பற்றிக்கொள்ளுகிறார்கள். ஆத்துமாவிலும் மாம்சத்திலுமிருக்கிற அனைத்து அசுசியிலுமிருந்து தங்களை சுத்திகரிக்கிற, பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்துகிற கடமை கொடுக்கப்படும்போது எரிச்சலடைகிறார்கள். இந்த பாதிக்கக்கூடிய திருப்திகளையும் தக்கவைத்துக்கொண்டு, பரலோகத்தையும் அடையமுடியாது என்கிறதை அவர்கள் கண்டு, நித்தியஜீவனுக்கான பாதை மிகக்குறுகலாக இருக்கிறபடியால், தாங்கள் இனி அதில் நடக்கமாட்டோம் என்று முடிவு செய்கிறார்கள். (17)

சிற்றின்பங்களில் திளைப்பதற்காக திரளானோர் தங்கள் சேஷ்ட புத்திர பாகத்தை விற்கிறார்கள்; ஆரோக்கியம் தியாகம் பண்ணப்படுகிறது; மனதின் திறமைகள் பெலமிழக்கின்றன; பரலோகம் விடடுக்கொடுக்கப்படுகிறது. இவை அனைத்தும் தற்காலிக இன்பத்துக்காக—பெலவீனப்படுத்தி குணத்தை தரந்தாழ்த்துகிற பசியின் திளைப்பிற்காக! அவசரமாக தான் மாற்றிக்கொண்டதன் மதியீனத்தைக் காணும்படி, மீட்கக்கூடாமல் மிகத் தாமதமாகிவிட்ட பிறகு ஏசா எழுந்ததைப்போலவே, பரலோகத்திற்கான தங்களுடைய சுதந்தரத்தை சுயநலமான திருப்திப்படுத்தும் காரியங்களுக்காக மாற்றிக்கொண்டவர்களின் நிலையும் தேவனுடைய நாளில் இருக்கும். (18) ★